அண்மையில் அமைச்சர் அவர்கள் இந்த சபையில் கூறும்போது, ஒரு ரப்பர் தொழிற்சாலே ஏற்படுத்துவதாகச் சொன்னார்கள். அது எப்பொழுது ஏற்படுத்தப்படும்? அதற்கான நடவடிக்கை என்ன நிலேயில் இருக்கிறது ? அது பெரிய அளவில் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU S.J. SADIQ PASHA : The district-wise registered area under rubber and the number of units in Tamil Nadu at the end of 1972-73 are as follows :

Name of district.	*Area in hectares.*
Kanyakumari district (Thovalai, Kalkulam and Vilavankode).	10,337

In other districts—Madurai, The Nilgiris, Coimbatore, Salem and Tirunelveli districts—Total 10,979 hectares.

இந்த விவரங்கள் இருக்கின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலேவர் அவர்களே, அரசாங்க ரப்பர் தோட்டங்களில் உற்பத்தியாகும் ரப்பரை வைத்து ஒரு தொழிற்சாலேயை அமைப்பதற்கு ஒரு பரிந்துரை வந்ததே, அது சம்பந்தமாக ஏதாவது முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி அந்தத் தொழிற்சாலே கட்ட எங்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலேவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் இரப்பர் தொழிற்சாலே ஒன்று ஆரம்பிப்பதற்கான குறிப்பு இருக்கிறது.

திரு. சு. துரைசாமி : தலேவரவர்களே, நம் மாநிலத்தில் விளேகின்ற ரப்பர் நமது மாநிலத்திலுள்ள தொழிற்சாலேகளுக்குக் கச்சா ரப்பராகக் கொடுக்கப்படுகின்றதா ? வேறு மாநிலங்களிலுள்ள இரப்பர் டயர் தொழிற்சாலேக்குக் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலேவரவர்களே, மொத்த உற்பத்தியில் தமிழ்நாட்டில் 5 சதவிகிதம் தான் உற்பத்தி ஆகிறது.

Out of the total production, 94 per cent is contributed by Kerala and Tamil Nadu's share is approximately 5 per cent. Only in the Kanyakumari district, rubber is cultivated more.

திரு. என். கே பழனிச்சாமி : தலேவரவர்களே, பெருவாரியான உற்பத்தி ஆகக்கூடிய இரப்பர்—ரா-இரப்பர் பூராவும் டன்லப் கம்பெனிக்குக் கொடுக்கப்படுகிறது. அது சாதாரணமாக வெளியில் விற்கின்ற விலேயை

1975 மார்ச் 20]

விட குறைவாக இருக்கிறது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு ரப்பர் பாக்டரியை ஆரம்பித்தால் அதிகமான இலாபத்தைப் பெறலாம். அடுத்ததாக, இங்கே தொழிற்சாலை ஆரம்பித்து ரா-ரப்பரை உற்பத்திப் பொருளாக ஆக்குவதற்குத் தடையாக மின்சார பற்றுக்குறை இருக்கிறது. ஆகவே, மின்சாரம் கொடுத்து அங்கே தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அங்கே உற்பத்தியாகிற ரப்பர் டெண்டர் மூலமாக விற்பனை செய்யப்படுகிறது. 1970-ஆம் ஆண்டில் மத்திய சர்க்கார் இரப்பருக்கு நிர்ணயித்த விலையை விட வெளி மார்க்கெட்டில் விலை குறைவாக இருக்கிறது. ஆகவே, நிலைமைக்குத் தகுந்தாற்போல அந்த ரப்பரை விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தான் ரப்பர் விளைகிறது என்று சொன்னார்கள். மற்ற மாவட்டங்களில் ரப்பர் விளைய வில்லையா ? அப்படியானால் மற்ற மாவட்டங்களில் ரப்பரை விளைவிப்பதற்கு ஆராய்ச்சி செய்து பரிசிலனை செய்யப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னபடி கன்னியாகுமரியில் மட்டும் அல்ல,— டிஸ்ட்ரிக்ட்வைஸாகச் சொல்கிறேன்: மதுரை மாவட்டம், நீலகிரி மாவட்டம், கோவை மாவட்டம், சேலம் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் என்ற இந்த மாவட்டங்களில் விளைகின்ற ரப்பரைப் பற்றி விவரங்கள் தந்திருக்கின்றேன். வட ஆற்காடு பற்றிய விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. என். டென்னீஸ் : தலைவரவர்களே, அமைச்சவரர்கள் முன்பே ஒரு கேள்விக்குப் பதில் அளித்தார்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமென்று. ஆனால் இப்போது இராமநாதபுரம் மாவட்டத்தில் அந்த தொழிற்சாலை ஆரம்பிக்கப்படப்போவதாகக் கூறியிருக்கிறார்கள். அத்தொழிற்சாலையை, முன்பு அமைச்சரவர்கள் இந்த சட்ட சபையில் கூறியது போல கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அது பற்றிய பூரா விவரங்கள் என்னிடம் இப்போது இல்லை. ரப்பர் உற்பத்தியைப் பற்றித்தான் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. அது பற்றிய விவரங்கள் தான் என்னிடத்தில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் அவருடைய கேள்வியிலுள்ள உள் அர்த்தத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பதில் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.